REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 1௳ திங்கள் (14—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 2௳ செவ்வாய் (15—3—55) [இதழ் 232

நேபாள மன்னர் இயற்கையெய்தினர்

நேபாள மன்னர் திருபுவனர், மார்ச் 13-ந் தேதி யன்று மாலை 3 மணியளவில் ஜூரிச்சில் இயற்கையெய்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன் அவர், இருதய நோய்க்குச் சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக ஜூரிச் சென்றிருந்தார்.

கம்யூனிஸ்டுகளின் தப்புக் கணக்கிற்கு நாட்டு மக்கள் நலன் பலியாவதா?

தேர்தலில் அவர்கள் தோற்றது ஏன்?

ஏகாதிபத்தியங்கள் தாசிகள் போன்றவை

வேலூரில் தோழர் ஈ.வெ.கி.சம்பத் வினவும் விளக்கமும்

"இன்று விவசாயிகளுக்கு மழை பெய்யாவிட்டாலும், மழை பெய்தாலும் கஷ்டங்கள் இருப்பதைக் காண்கிறோம். முன்பு விவசாயிகளின் குறை, 'தொடர்ந்து பல ஆண்டுகளாக மழை பெய்யவில்லை—அதனால் ஆறும், ஏரியும், குளமும், குட்டையும் வறண்டு விட்டன—வயல் வெடித்துக் கிடக்கிறது—அதனால் விளைச்சல் இல்லை—வாழ்வில்லை என்ற குறையிருந்தது; இன்று, நல்ல மழை பெய்து, நாடெங்குமுள்ள ஏரிகள் நிரம்பி, வயல்கள் செழித்து, நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது; நல்ல விளைச்சலின் காரணமாக, விவசாயப் பண்டங்களின் விலை வீழ்ந்து விட்டிருக்கின்றன; அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு செலவிட்ட தொகையைக் காட்டிலும் விலைகள் குறைந்துவிட்டதால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது; 'விலை இறக்கம் என்றால் மகிழ்ச்சிதானே?' என்றால், விலை இறக்கம் 100-க்கு 20 அல்லது 25 பேராக இருக்கிற விவசாயிகளல்லாத நகர்ப்புற வாசிகளுக்கு சாதகமானதாக—சௌகரியமானதாக இருக்கலாம்; ஆனால், 100-க்கு 70 பேராக இருக்கிற கிராமங்களில் வதியும் விவசாய மக்களுக்கு சௌகரியமானதல்ல என்பது எல்லோரும் அறிந்ததே!

"இப்படி, மழை பெய்தாலும், மழை பெய்யாவிட்டாலும் விவசாயிகளுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன என்றால் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம்தான் என்ன? எதில் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் கிடைக்கவிருக்கிறது?

"ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிற காங்கிரஸ்காரர்கள், இதுபோன்ற பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரமாக, தாங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டுகிறார்கள்;

"அந்த ஐந்தாண்டுத் திட்டத்தினைத்தான் நாம் வரும் 20—3—55 அன்று கண்டித்து கண்டனக் கூட்டங்கள் நடத்தி நாடெங்குமிருந்து அந்தத் திட்டத்தின்மீது கண்டனக் குரலை எழுப்பவிருக்கிறோம்; ஆட்சியாளர்கள் கேட்கலாம்—'அபிவிருத்தித் திட்டமான ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்கிறார்களே,'—என்று! உண்மைதான்; ஐந்தாண்டுத் திட்டம், ஒரு அபிவிருத்தித் திட்டம் தான்; ஆனால், அத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி எல்லாம் எங்கே? இந்தக் கேள்வியைத்தான் கடந்த மூன்றாண்டு காலமாக நாம் கேட்கிறோம்; வருகிற வாரம், நாடு முழுவதும் கேட்கப்போகிறது—அந்தக் கேள்வியை!

'மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை பிரரேபித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்—'இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலுமில்லாத அளவு சென்னை மாநிலத்தில்தான் 2,500 கிராமங்களுக்கு மின்சார வசதி தரப்பட்டிருக்கிறது,'—என்று!

"உண்மைதான்; சென்னை மாநிலத்திற்கு அந்த ஐந்தாண்டுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இதுவரை 2,500 கிராமங்களுக்கு மின்சார ஒளி கிடைத்திருப்பதுதான்! 'அடுத்து வரும் ஆண்டுகளிலும், ஆண்டொன்றுக்கு 1000 கிராமம் வீதம் மின்சார ஒளிபெறும்,' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"கிராமங்களுக்கு மின்சார ஒளி தரப்பட்டிருப்பதினாலேயே நாட்டு மக்களின் பொது வருவாய் அதிகரித்து, கஷ்டங்கள் நீங்கி, வாழ்வு கிடைத்துவிட்டதா என்றால், இல்லையே! மின்சார ஒளி கிராமங்களுக்கு மிக அவசியமாகத் தேவையான வசதிகளுள் ஒன்று; ஆனால் அதுவா மக்களின் தேவை?

"தமிழ் நாட்டின் இன்றையத் தேவை, கிராமங்கள் தோறும், வீடுகள் தோறும் மின்சார விளக்கு வேண்டுமென்பதல்ல; மக்களுடைய பொது வருவாய் அதிகரித்து, வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதுதானே!

"அதைப்போலவே, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சென்னையைப் பொறுத்தவரை, கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வதும், வைத்திய வசதி, அடிப்படைக் கல்வி, குடிசைத் தொழில் இவற்றை அதிகரிப்பதும்தான் என்று கூறப்படுகிறது.

"நோய் போக்க—வைத்திய வசதியும், அறியாமை நீங்க—அடிப்படைக் கல்வி வசதியும் அவசியந்தான்; மிக மிக அவசியந்தான்; நோயைப் போக்கிக்கொண்டு மனிதன் வாழ்வதற்கு, உணவே கிடைக்கவில்லை என்றால், 'அவனுக்கு நோய் போக்க வைத்திய வசதி செய்கிறேன்,' என்கிறது சென்னை அரசாங்கம்!

"ஒரு ரூபாய் வைத்திருக்கிறான் ஒருவன்; அவனுக்கு பசி கடுமையாக இருக்கிறது; அவன் தனது பசி நீங்க, அந்த ஒரு ரூபாயைக் கொண்டு உணவுப் பண்டம் வாங்குவானா, அல்லது 'வீட்டிலே கொளுத்தி வைத்தால் 'கம்'மென்று மணக்கும்,' என்று கருதி ஊதுவத்தி வாங்குவானா? 'ஊதுவத்தி வாங்குவேன்,' என்கிறார் சுப்பிரமணியம்—தனது வரவு—செலவுத் திட்ட சொற்பொழிவின் மூலம்! மனிதனே, சோறின்றிச் சாகும்போது, 'அந்த மனிதனுக்கு மருந்தும், கல்வியும் தருகிறேன்,' என்று கூறிக்கொண்டிருக்கிறார் சுப்பிரமணியம்!

"தென்னாட்டில், மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், கிடைக்கிற மின்சாரத்தைக் கொண்டு மக்களின் பொது வருவாய் அதிகரிப்பதின் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய காரியங்களைச் செய்யாமல், கிராமங்களுக்கு 'வெளிச்சம்' போட்டுக்கொண்டிருக்கிறார்; ஆனால் வடநாட்டிலோ கிடைக்கிற மின்சாரத்தைக் கொண்டு, அந்த நாட்டு மக்களின் பொது வருவாயை அதிகரிக்கும் வகையில், புதுப்புதுத் தொழிற்சாலைகளை உருவாக்கி வருகிறார்கள்; வடநாடு தொழில் வளம் மிகுந்த நாடாக, வேகமாக வளர்க்கப்படுகிறது; தென்னாடு விவசாயத்தை மட்டும் நம்பிக்கிடந்து தேயுமாறு செய்யப்படுகிறது.

"விவசாயத்தைமட்டும் நம்பிக்கிடக்கும் ஒரு நாடு வளருமா? நாளாவட்டத்தில் தேய்ந்துதான் போகும்! ஏனெனில், விவசாயத்தின் அளவு மாறக்கூடியதல்ல; வளரக்கூடியதல்ல.

"இந்த நாட்டிலே மக்கள் பெருக்கம் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதையும் மனதில் கொண்டு சற்று கவலையோடு சிந்திப்பவர்களுக்கு, 'நாம் வளர முடியாத விவசாயத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால், எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வளிக்க என்ன திட்டம் வைத்திருக்கிறோம்?' என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

"பெருகி வளரக்கூடிய தொழில்கள் எல்லாம் தென்னாட்டில் இல்லை—வடநாட்டில்தான்; இந்த நிலையினால், கூரிய சிந்தனை உள்ளவர்கள் தெரிந்து கொள்ளலாம்—தென்னாட்டின் எதிர்காலத்தை!

"திராவிட நாட்டின் விடுதலையை நாமாகவே பெற்றாலும் பெறலாம்; அல்லது, வடநாட்டுக்காரர்கள் தாமாகத் தந்தாலும் தந்துவிடலாம்!

"தாசிகள் பற்றிய கதைகள் நீங்கள் நிரம்பப் படித்திருக்கலாம்—தாசி, ஒருவனிடத்தில் பணம் இருக்கும்வரையில்தான், 'என்னைத் தழுவிக்கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது?' என்று 'ஈருடலும் ஓருயிரும்' என்பதுபோலப் பேசுவர்; ஆனால், அவனிடமிருந்த பணம் பூராவும் பறிபோன பிறகு, 'அவன் இனி நம் வீட்டிலிருந்தால் சோற்றுக்குக் கேடு,' என்றநிலைக்கு வரும்

(4-ம் பக்கம் பார்க்க.)

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கட்கு வேலூர் நகராட்சி மன்றம் வரவேற்பு

வேலூர் (வ ஆ.) நகராட்சி மன்றத்தார், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை 13—3—55 ஞாயிறன்று அன்புடன் அழைத்து உபசரித்து வரவேற்பு தந்தனர்.

நகர தி. மு. கழகத் தோழர்கள் நகரசபை வரவேற்பையொட்டி, நகரின் பல பகுதிகளை கொடிகளாலும், தோரணங்களாலும் அழகுபடுத்தியிருந்தனர்.

தோழர் சம்பத் அவர்கள் நகரசபை வாயிலில், தலைவர் சீதாபதி அவர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்டார்.

அலங்கரிக்கப்பட்டிருந்த நகரசபை மண்டபத்தில் தலைவர் திரு டி. ஆர் சீதாபதி பி.ஏ., பி.எல்., அவர்கள், தோழர் சம்பத் அவர்கட்கு நகரசபை சார்பில் ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

இதற்கு முன்னர், விழாத் துவக்கத்தில் "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு" என்ற திராவிட நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

திராவிடப் பண் இசைக்கும் போது, விழாவில் கலந்துகொண்ட எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தனக்கு வேலூர் நகராட்சி மன்றத்தார் அன்புடன் வரவேற்புத் தந்து பெருமைப்படுத்தியதற்காக நன்றி தெரிவித்து சீரியதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக நகரசபை உறுப்பினர் தோழர் எம். பி. சாரதி அவர்கள் நன்றி நவின்றார்.

வரவேற்பு விழாவில், நகரசபை அதிகாரி, ஆணையாளர், நகரசபை உறுப்பினர்கள், மற்றும் நகர உறுப்பினர்கள் எல்லோரும்-குறிப்பாகக் காங்கிரஸ்காரர்களும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

நாட்டு வணக்கப்பாடலுடன் விழா 11-30 மணியளவில் முடிவுற்றது. (ச. த. கி.)

விவசாயத் துறையில் ஊழல் மயம்?

அதிகாரத்தைப் பரவலாக விநியோகிக்க முடிவு

"தறபோது, விவசாயத் திட்டம் மத்திய சர்க்காரின் முழுப் பொறுப்பிலிருந்துவருவதால், அங்குள்ள மக்களின் ஊக்கம் குறைந்துவருகிறது,"

என்று, சோவியத் ரஷ்யா கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழுவும், சோவியத் சர்க்காரும் சேர்ந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வெளிடப்பட்டிருக்கிறது.

மத்திய கண்ட்ரோலை ஒழித்துவிட்டு, அவ்வதிகாரம் முழுமையையும் பரவலாக வினியோகிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த 2-ந் தேதியன்று சோவியத் அமைச்சரவையில் விவசாய இலாகா அமைச்சராக இருந்தவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரல்லவா? சோவியத் இதழ்கள் பலவும், வானொலியும், அவரது இலாகாவை வன்மையாகக் கண்டித்துக் கொண்டே வந்தனவாம்.

விவசாய இலாகாவிலும், தொழில் துறையிலும் ஒரே ஊழல் மயங்களாக இருந்ததே மாலென்கோவின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

நிற்காதாம்

இந்தியாவில் இப்போதைக்கு சர்க்கரை இறக்குமதி அளவைக் குறைக்கும் எண்ணம் இல்லை என்று மக்கள் சபையில் சர்க்கார் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இப்போது 5 லட்சம் டன் வரை சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணதுரை

சென்னை 14—3—55 திங்கள்

மகத்தான முயற்சி!

ஜாதி, இந்து மதத்தின் அடிப்படை. இந்து மதமோ, ஆரியப் புரோகிதர்களின் சிருஷ்டி. ஜாதிப் பாகுபாடும், அதையொட்டி எழுந்துள்ளதாகச் சொல்லப்படும் வழக்கில் உள்ள சம்பிரதாயங்கள் அனைத்தும் புரோகிதக் கூட்டத்தின் தினசரி பிழைப்புக்கும், பொதுப் புகழுக்கும் துணை செய்வனவாகும். எனவே, தங்களுக்கு நலம் செய்துவரும் பழக்க வழக்கங்களையும், ஜாதி உயர்வு தாழ்வுகளையும், கால வேகத்தால் சரிந்துவிடாமல் பாதுகாத்துக் காப்பாற்றி வரவேண்டியது அப்புரோகிதப் பரம்பரையினருக்குக் கட்டாயமாகிவிட்டது.

நிலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கட்டாயத்தின் காரணத்தால், ஆரியப் புரோகிதர் குடி பிறந்த நல்லறிவாளர்கள் சிலர், ஓரோர் சமயத்தில் ஜாதியக் கேடுகளை பட்டும் படாமலோ அல்லது பகிரங்கமாகவோ கண்டித்த போதிலும்கூட, தங்கள் நல்லெண்ணத்திற்கு ஒரு உருவம் கொடுத்து, தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுவிட்டனர். எனவே, அந்த நல்லறிவாளர்களின் சமரசக் கருத்து, எதிர்பார்த்த பலனைத் தர தவறிவிட்டது.

ஏழைக் குடிவந்த ஒருவன் தனது அறிவாற்றலாலும், சிக்கனப் போக்காலும் பெரும் செல்வந்தனக ஆவதும், பெரும் செல்வந்தன் தனது வரவுக்கு மிஞ்சிய ஊதாரிச் செலவால் ஏழையாகிவிடுவதும் அனுபவமாகும். இம்மாறுதல் தனி விதியே அல்லாது. பொது விதி அல்ல என்பதை நாமும் அறிவோம். இரண்டொருவர் விஷயத்திலாவது, மேற்குறிப்பிட்ட தனி விதி செயல்படுவதைப் பார்க்கிறோம்.

ஆனல், ஆரியப் புரோகிதர் புகுத்திய ஜாதி வேற்றுமையால் பார்ப்பனக் குடிபிறந்த ஒருவன், அக்குடியில் பிறந்துவிட்ட ஒரு காரணத்தினலேயே, பிறரின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்று வருவதையும், மற்ருெருவன் வேறு ஒரு ஜாதியில் பிறந்துவிட்டதின் காரணத்தினலேயே மற்றவர்களால் தாழ்வாகக் கருதப்பட்டு இழிவாக மதிக்கப்படுவதையும், நடத்தப்படுவதையும் நாம் தினம் தினம் கண்டு வருகிறோம். பிறப்பினுல் உயர்ந்தவர் தான் என ஒருவர் கூறிக்கொள்வதை, அதை மற்றவர் எதிர்க்காது இருந்துவிட்டதுடனில்லாமல், ஒப்பி வரவேற்று தன்னைத் தானே தாழ்த்திக்கொள்ளவும் முன்வருகிறபொழுது. இருவர் உள்ளங்களிலும் எத்தகைய பண்பாடு உருவாகி வளரும் — வளரக்கூடும் — வளர்ந்திருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எண்ணத்திற்கும் கால்கள் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அரசியல் அதிகாரத்திற்கும், சொத்திற்கும் உள்ள ஆற்றலுக்குள்ளத்தகைய வலிமையிருக்கிறதோ, அதைப் போன்றே—ஏன்—அதிலும் கூடுதலான வலிமை, இந்தப் பிறப்பினல் ஏற்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும் உயர்வு — தாழ்வு எண்ணத்திற்கும் உண்டு. எனவே, 'வலிமை'க்குள்ள ஆக்கல் - அழித்தல் ஆகிய இரு பொதுத் தன்மைகளும், பிறப்பினல் இடம் பெறும் எண்ணத்திற்கும் உண்டு என்பதை ஒருவராலும் மறுத்துவிட முடியாது.

பிறப்பின் காரணமாகவே ஒருவனை உயர்ந்தவனகவும், மற்ருெருவனைத் தாழ்ந்தவனகவும் கருதத்தக்க இழிந்த ஏற்பாட்டை எதிர்க்க எவரும் முன்வராத நிலையில், தன்னை பிறப்பினல் உயர்ந்தவன் எனக் கருதிக்கொண்டு இருப்பவன் ஆணவக் குன்றேறி நிற்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. அதே நேரத்தில் தன்னைத் தாழ்ந்தவன் என நம்பிக் கொண்டிருப்பவன் அடிமை உணர்வுடன் அஞ்சிக் கிடப்பதிலும் வியப்பில்லை.

இந்த ஜாதி வேற்றுமை அழிந்துவிடுவதால், எவருடைய ஆதிக்கம் அழிந்துவிடும் என்ற நிச்சயமிருக்கிறதோ, அவர்கள் அனைவரும் அறிந்தோ அறியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ ஜாதி ஒழிய வேண்டும் எனப் பேசுகிறவர்களை கேலியாகப் பேசவும் செய்வர்—ஏசவும் செய்வர். ஜாதி ஒழிந்து சமத்துவம், சமரசம் தேவை என்பவர்களை, ஜாதிப் பெயரால் சிறப்படைந்து வருபவர்கள், நாத்தீகன் என்பர்—தெய்வ நிந்தகன் என்பர்; ஆசை, அறிவைக் கெடுக்கிறது!

கோடை வெயிலில் பாதரட்சையுடன் பாதையில் நின்றுகொண்டு இருப்பவனல் ஒருக்காலும் வெயிலின் கொப்பளிக்கும் சூடு குறித்துத் தெரிந்து கொள்ளவும் முடியாது—கால் சுடுகிறது எனக் கூறவும் மாட்டான். ஆனல், செருப்பணியாது; நடுவீதியில் நின்று கிடப்பவன் கால்கள் கொப்பளித்து விடும் — கோவெனக் கதறவும் செய்வான்.

பிறப்பில் உயர்ந்தவன் எனக் கருதிக் கொண்டிருக்கும் மதோன்மத்தனுட, இழிந்தவன் என நம்பிக்கிடக்கும் அப்பாவியும், ஜாதி பேதந்தான் அடைந்து வரும் சுகதுக்கங்களாகும்.

படித்த பரம்பரை ஜாதி ஏற்பாட்டால் உயர்வு பெற்று வந்திருக்கிறது. மற்றவர் ஜாதி ஏற்பாட்டால் இழிநிலை பெற்று வருகின்றனர்.

ஜாதி ஒழிவதை, அதனல் உயர்வு பெற்றுவரும் படித்த பரம்பரையினர் எதிர்ப்பது போன்றே மற்ற ஜாதியினரும் எதிர்க்கச் செய்கின்றனர் என்பது சிந்திக்கத்தக்கதேயாகும்.

ஜாதி ஒழிப்புக்குக் குறுக்கு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. முயற்சி தீவிரமாகத்தான் இருக்கவேண்டும். வேகமுடைய முயற்சியானலும், விளைவு பிரம்மிக்கத் தக்கதாக இருக்காது. அதுவுமன்றி, பயன் ஏதாவது ஏற்பட்டதோ இல்லையோ என்று ஐயமூட்டக் கூடியதாகவும் இருக்கும். பலன் ஏற்பட்டிருக்கிறது — நிச்சயமான பலன் ஏற்பட்டிருக்கிறது.

அதோ மைசூரில், ஜாதி ஒழிப்பு முயற்சியின் பலன் கண்ணுக்கு மிக மிகக் கணிசமாகத் தெரிகிறது. அதுவும் பட்டம் பெற்றவர்களிடமும், பட்டம் பெற கல்லூரிகளில் படித்துக்கொண்டு இருப்பவர்களிடமும் ஜாதி ஒழிப்பு ஆர்வம் பீறிட்டு அடிக்கிறது.

ஏதோ குறிப்பிட்ட ஜாதியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், பட்டப்படிப்புப் படித்தவர்கள், கொஞ்சம் நஞ்செய், புஞ்செய் நிலமும், இரும்புப் பெட்டியில் கொஞ்சம் பணமும் வைத்திடும் நிலையில், எதைத் தேடக் கிளம்புவார்களோ, எதைத் தேடுவது வழக்கமாக இருந்து வருகிறதோ, அதைவிடுத்து—அந்தத் தேய்ந்த பாதையை விட்டு விலகி, மைசூர் மகாராஜா கல்லூரியில் படித்து முடித்த-படித்து வரும் இருபது வாலிபர்கள், ஜாதியைத் தகர்க்க உறுதி கொண்டுள்ளனர். கலப்பு மணம் செய்துகொள்ளுவதின் மூலம் ஜாதி ஒழிப்பைத் துரிதப்படுத்த அவ்வாலிபர்கள் சூளுரைத்துக் கொண்டுள்ளனர். கல்லூரி இளைஞர்களின் உறுதி கண்டு பூரிப்படைகிறோம்—பாராட்டுகிறோம். மைசூர் கல்லூரி மாணவர்களைப் பின்பற்றுமாறு நமது தமிழ்நாட்டு மாணவர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். மாணவர்களின் மகத்தான முயற்சி வெற்றி பெற வேண்டுமெனப் பெரிதும் விழைகிறோம்.

ஆதிவாசிகளிடம் சர்க்காரின் மாற்றுந்தாய் மனப்போக்கு!

சட்ட சபை உறுப்பினர் பதவியை உதறினர்

ரெய்பூர், மார்ச் 10—

தனது தொகுதி ஆதிவாசிகளிடம் சர்க்கார் மாற்றுந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வதாகக் குற்றம் சுமத்தி, ம.சோ. கட்சியைச் சேர்ந்த லால் ஷாம் ஷா என்ற ஆதிவாசியான சட்ட சபை உறுப்பினர். தமது உறுப்பினர் பதவியை இராஜினமாச் செய்திருக்கிருர்.

அவர் தனது தொகுதி மக்களின் நலன்களை அரசாங்கம் எப்படி புறக்கணித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தயாரித்துள்ள பட்டியலில், அம்பகார் செனக்கி என்ற கிராமத்தில் உள்ள மருத்துவ மனையில் நீண்ட காட்களாக மருத்துவரே இல்லை என்பதும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தென்னெட்டி விசுவநாதம்

மீண்டும் தேர்தலில் நிற்பார்

கர்னூல், மார்ச் 10—

அண்மையில் நடைபெற்ற ஆந்திரப் பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற முன்னள் பிரகாசம் மந்திரி சபையில் நிதி மந்திரியாக இருந்தவரும், பிரஜா கட்சியின் தலைவருமான தென்னெட்டி விசுவநாதம், மீண்டும் உபதேர்தல் வரும்போது போட்டியிடுவார் என்று தெரிகிறது.

இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கும் திரு கோபால் ரெட்டி, ஏதாவது ஒரு தொகுதியில் தமது உறுப்பினர் பதவியைக் கைவிடும்போது, அந்த இடத்திற்குத் தோழர் விசுவநாதம் போட்டியிடவிருக்கிருராம்.

கொல்லப்படுவதற்கு முன் ரூ. 3,750 செலவில் விருந்து

பம்பாய் நகரசபையின் விசித்திர ஜீவகாருண்யம்!

மரண கிடங்கிற்குத் தள்ளி கொல்லப்படுவதற்கு முன், மரணத்தைப் பெற காத்துக்கொண்டிருக்கும் உயிர்களுக்கு இறுதியாக விருந்துவைக்க பம்பாய் நகரசபை தீர்மானித்திருக்கிறது.

அதற்காக, விருந்தாளிகளுக்குத் தேவைப்படும் 90, 000 'சப்பாத்தி'களை ரூ. 3,750 செலவில் வாங்குவது எனவும் நகர சபை திட்டமிட்டிருக்கிறது.

இந்தச் 'சப்பாத்தி'கள் உயர்ந்த மாவினல் செம்மையாகத் தயாரிக்கப்பட்டு, நெய் மேல்பூச்சுடன் இருக்க வேண்டுமென நகரசபைதா ஏற்பாடு செய்துள்ளது.

ஒரு வருஷம் பூராவும் இந்த 90,000 'சப்பாத்திகள்,' பிடிபடுகிற விருந்தாளிகளின் எண்ணிக்கைக் கொப்ப, தேவைப்படும் அளவு அவ்வப்பொழுது வாங்கிக்கொள்ள வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

நச்சுப் புகை அறையில் தள்ளப் பட்டு, மூச்சுத் திணறி மரணத்தைத் தழுவுவதற்கு முன், நெய் வாடையுடனகூடிய உயர்ந்த 'சப்பாத்தி'யைத் தின்ன, பம்பாய் நாம்டாடி நாய்கள் என்ன புண்ணியம் பண்ணிற்ரே? பம்பாய் நகர பிதாக்களின காருண்யமே காருண்யம்!

"கொடுத்த நிலம் பறிக்கப்படும்!"

பாடுபட விரும்பாத அகதிகளுக்கு பக்ஷி எச்சரிக்கை

"இங்கு (காஷ்மீர்) குடியேறியுள்ள அகதிகளுக்கு, பயிரிட்டு வாழ்வதற்காக நிலம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் இதுவரை பயிரிடாதது வருந்தத் தக்கது. ஏப்ரல் மாதத்திற்குள் அவர்கள் மேற்படி நிலத்தில் சாகுபடி செய்யத் தவறும்பட்சத்தில், அந்த நிலம் முழுதும் பறிமுதல் செய்யப்படும்."

—இவ்வாறு, காஷ்மீர் முதல் மந்திரி பக்ஷி குலாம் முகமத் தாலுகா தேசிய மாநாட்டில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

மக்கள் சோஷலிஸ்ட் கட்சியினர் போக்கைக் கண்டித்துப் பேசினர். சந்தேகப்படத் தகுந்த சக்திகளுடன் ம. சோ. கட்சியினர் உறவு கொண்டாடுவதாக முதல் மந்திரி குறிப்பிட்டார். அவர்கள் சமதர்மம் பேசுவது ஏமாற்று வித்தை எனவும் குலாம் முகமது முணுமுணுத்தார்.

ஆங்கிலம் உலக மொழி

இந்தியாவில் அது தேவையே

"ஒரு காலத்தில், தாய் மொழியைப் புறக்கணிக்கிற அளவுக்கு ஆங்கில மொழி படிப்பது நாகரீகம் என்று கருதப்பட்டது. ஆனல், இன்று தாய்மொழி வளரவேண்டும் என்று எல்லா மக்களும் விரும்புகிருர்கள்.

"அதேநேரத்தில், ஆங்கிலத்தை இன்றுள்ள நிலையிலிருந்து ஒழித்துவிட்டு தேசிய, பிரதேச மொழிகளை ஊக்குவிப்பதற்கான இயக்கங்கள் நடைபெறுகின்றன

"ஆங்கிலம் இன்று ஒரு அகில உலக மொழி. எந்த ஒரு தனிப்பட்ட நாட்டுடையதும் மொழி அது. பிரதேச மொழிகள் நல்ல வளர்ச்சியைப் பெறும் வரையில் இந்தியாவில் ஆங்கிலம் இருக்க வேண்டியது, மிக அவசியமானதாகும்," என்று டாக்டர் பி. வி. செரியன், அண்ணமலை பல்கலைக் கழக மலையாள மொழிக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

'டாக்டர்'கள் ஏராளமாகத் தேவை

புதுடில்லி, மார்ச் 10—

"இந்தியாவில் மருத்துவக் கல்வியை எதிர்நோக்கி இருக்கிற மிக முக்கியமான பிரச்சினை கல்லாய, மிக அதிகமாகத் தேவைப்படும் 'டாக்டர்'களின் எண்ணிக்கைதான்; ஆனல் அதே நேரத்தில் மருத்துவக் கல்வியின் தரம் குறையாமலும், அழிந்துபடாமலும் கவனமுடன் பார்த்துக்கொள்ள வேண்டியதும் மிக அவசியமாகும்,"

என்று, யூனியன் அரசாங்க, சுகாதார இலாகா மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி குறிப்பிட்டிருக்கிருர்.

பஜனை தராத பலன்!

அப்ரமா (சூரத்), மார்ச் 10—

ஆதரவற்ற முதியவர்களையோ, பலவீனர்களையோ, பட்டினி கிடக்கவோ, அல்லது பிச்சைஎடுக்கவோ விடுவதில்லை என்று அப்ரமாகிராம வாசிகள் உறுதி மேற்கொண்டுள்ளனராம்.

அவர்கள் 'மித்ரமண்டல்' என்ற பெயரில் ஒரு சங்கம் உருவாக்கி, அனதைகளுக்கு உதவுவதற்காக நனகொடையாக ரொக்கம், உணவுப் பொருள்கள், துணிமணிகள் ஆகியவற்றை வசூலித்து வருகின்றனராம்.

கடந்த மூன்ருண்டுகளாக இந்தச் சங்கம் பணிபுரிந்து வருவதாயும், இந்த உதவி இயக்கத்தை அருகில் உள்ள கிராமங்களிலும் பரப்பப் போவதாகவும் அப்ரமா கிராம சமூக ஊழியர் தாகூர்பாய் தேசாய் கூறுகிருராம்.

அணுகுண்டு வைத்துள்ள வல்லரசுகள்

மக்கள் சபை உறுப்பினர்கள் வேண்டுகோள்

புதுடில்லி, மார்ச் 11—

அணு ஆயுத யுத்தத்திற்கான எல்லா முஸ்தீபுகளையும் நிறுத்தும்படி, சகல கட்சிகளையும் சேர்ந்த 100-க்கு மேற்பட்ட இந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் பெரும் வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனராம்.

"பெரும் வல்லரசுகளும் அவற்றைச் சார்ந்த நாடுகளும் தங்களிடமுள்ள எல்லா அணு ஆயுதங்களையும் அழித்துவிட வேண்டும். இம்மாதிரி ஆயுதங்கள் உற்பத்தியாவதை ஐ. நா. மேற்பார்வை தடை செய்யும்படி எல்லா சர்க்கார்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அணு ஆராய்ச்சியை ஆக்க வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும்" என அந்த 100 அங்கத்தினர்களும் கையெழுத்திட்டுள்ள வேண்டுகோள் காணப்படுகிறது.

டெல்லி மக்கள் சபையில்

★

இரயில் பிரயாணிகள் வசதிக்கு.........

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இரயில் பிரயாணிகளின் வசதிகளுக்கென செலவிடுவதற்காக, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று, இரயில்வே அமைச்சரின் மக்கள் சபைச் செயலாளர் தெரிவித்தார்.

பிரயாண வசதிகள் பற்றிய துணை குழுக்களின் ஆலோசனைகளுடன் விரிவான திட்டங்கள் வகுக்கப்படுமென்றும், அவற்றுள், மேலும் அதிகமான வண்டிகளை விடுவது, தூங்குமிட வசதியுள்ள பெட்டிகளுக்கு ஏற்பாடு, மலிவான உணவு வசதி, நீண்ட தூரம் பிரயாணம் செய்பவர்களுக்கு உட்காரு மிடங்களை 'ரிசர்வ்' செய்து தருவது, பிரயாணிகள்நிற்கும் 'பிளாட்பார'ங்களுக்கு மேல்கூரை வசதி, சீரமைக்கப்பட்ட வெளிச்ச வசதிகள், தக்க குடிநீர் வசதி, முறையான புக்கிங்வசதிகளுக்கு ஏற்பாடு, சீரமைக்கப்பட்ட சக்கூஸ் வசதிகள், உட்காரும் பெஞ்சுகளுக்கு ஏற்பாடு, நிழல்தரும் மரங்களை நடுவதற்கு ஏற்பாடு, இன்னும் இவை போன்ற பல வசதிகளும் செய்து தர திட்டங்கள் வகுக்கப்படுமெனவும் தெரிவித்திருக்கிறார்.

இரவு விமானத் தபால்

இரவு விமானத் தபால் 'சர்விசு'களுக்காக நான்கு 'டகோட்டா' விமானங்கள் உபயோகிக்கப்படுகின்றனவென்றும், அவசரத் தேவைகளைச் சமாளிக்க, நாகபுரி, கல்கத்தா, டில்லி, பம்பாய், சென்னை ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு 'டகோட்டா' விமானம் எப்போதும் தயாராக இருந்து வருகிறதென்றும் கூறப்பட்டது. 'இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பொரேஷ'னுக்காக நான்கு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட விமானங்களை வாங்குவது பற்றி யோசிக்கப்பட்டுவருகிறதென்றும், இவ் விமானங்கள் கிடைத்தவுடன், இரவு விமான சர்விசுகளுக்கு உபயோகப்படுத்தப்படும் விமான ரகங்களில் சில மாறுதல்கள் செய்யப்படலாமென்றும் மந்திரி கூறினார்.

உத்தேசமில்லையாம்!

இரவு விமானத் தபால் சர்விசுகளில், பிரயாணிகளின் போக்குவரத்தை ரத்து செய்யும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லையென்று, உதவி செய்திப் போக்குவரத்து மந்திரி ராஜ் பகதூர் தெரிவித்தார்.

'சொந்த டெலிபோன்' திட்டம்

'சொந்த டெலிபோன்' திட்டத்தின்கீழ், நாடு முழுவதிலும் 1955 ஜனவரி 31-ந் தேதி வரை, மொத்தம் 17,960 பேருக்கு டெலிபோன் இணைப்புகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. திட்டம் நாட்டில் 11 நகரங்களில் அமுலில் இருந்து வருகிறது. சென்னை நகரத்தில், 1,538 பேருக்கு டெலிபோன் இணைப்புகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது என்று சபையில் அறிவிக்கப்பட்டது.

பூர்த்தியாகிவிடும்?

கிழக்கு பஞ்சாபில் சாந்திகாரில் நிர்மாணிக்கப்பட்டுவரும் விமான நிலையம், இவ்வாண்டு இறுதிக்குள்ளாகப் பூர்த்தியாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்ற தகவலை உதவி செய்தி போக்குவரத்து மந்திரி வெளியிட்டிருக்கிறார்.

அங்குதான்— இங்கில்லை!

பீகாரில் உள்ள அபிரகச் சுரங்கங்களில் வேலை பார்த்துவரும் தொழிலாளர்களுக்கு, அபிரகக் கனிச சுரங்கங்களுக்கான தொழிலாளர் க்ஷேமலாப நிறுவனத்தின் மூலமாகச் சுமார் ரூ. 14,500 பெறுமானமுள்ள ஒலிபெருக்கிகளுடன் கூடிய 16 ரேடியோ செட்டுகளை இலவசமாக விநியோகிக்க மத்திய சர்க்கார் உத்தேசித்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்பார்க்கிறது!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்திய இரயில் வேக்களில், இரயில் பாதை சக்தி, 1955—56-ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் சுமார் 50 சதவிகிதம் அதிகரிக்கப்படும் என்று, உதவி இரயில்வே போக்குவரத்து மந்திரி கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

உப்பளத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

தோழர் கே. வி. கே. சாமி கைது

தூத்துக்குடி, மார்ச் 10—

இவ்வாண்டில் தொழிற் சங்க வேண்டுகோளின்படி, எல்லா உப்பு வியாபாரிகளும் நியாயமான கூலியைக் கொடுத்துவிட்டார்கள். வருடாவருடம் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்வதையே தொழிலாகக் கொண்ட உப்பு வியாபாரிகளான பூ. சி. பொ. கந்தசாமி நாடார், வேதம்பிள்ளை ஆகிய இருவரும் தொழிலாளர்கட்குக் குறிப்பிட்ட நியாயமான கூலி கொடுக்க மறுத்துவிட்டார்கள். அவ்விரண்டு பேர்களின் உப்பளங்களிலும் 23—2—55-ந் தேதி முதல் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

இதைத் தடுப்பதற்காக,க் கருங்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் மற்ற தொழிலாளர்கள் ஒன்றுபட்டு அச் சருங்காலிகளை விரட்டியடிக்கவே, ஏமாற்றம் கண்ட மேற்படி இருவரும் போலீஸ் அதிகாரிகளிடம் புகார் செய்திருக்கின்றனர். அதன் பேரில் உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் கே.வி.கே. சாமி, செயலாளர் எஸ். கே குழந்தைவேல் உட்பட 6 தொழிலாளர்கள் நேற்றிரவு 7 மணியளவில் கைது செய்யப்பட்டார்கள்.

இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் யாரும் இன்று வேலைக்குச் செல்லவில்லை. வேலை நிறுத்தம் அமைதியாகவே தொடர்ந்து நடைபெறுகிறது.

(ந. நி)

விலைவாசிகள் வீழ்ச்சியைத் தடுக்க...

சென்னை, மார்ச் 11—

விளைபொருட்களின் விலைவாசி நிலவரங்களை உன்னிப்பாகக் கவனித்து, குறைந்த பட்ச அளவை விட விலைகள் குறைந்தால் பரிகார யோசனைகளைத் தெரிவிப்பதற்காக, ஐந்து அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை சென்னை அரசாங்கம் நியமித்திருப்பதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அளவுக்கும் அதிகமாக விலைகள் குறைந்தால், சர்க்காரே அந்த விளை பொருட்களை விலைக்கு வாங்குவது, ஏற்றுமதி, போக்குவரத்து, வர்த்தகம் இவற்றை அதிகரிப்பது, மத்திய சர்க்காரிடமுள்ள அரிசியை விற்பதை நிறுத்தி வைப்பது, விவசாயிகளுக்கு கடன் வசதி, மார்க்கட்டிங் வசதி ஆகியவற்றை அதிகரிப்பது ஆகிய நடவடிக்கைகளை, அவசியமானால் மேற்கொள்வது பற்றி சர்ககாருக்கு இக்குழு ஆலோசனை கூறும்.

'மற்றவர்களைப் போன்றே நாங்களும் செய்கிறோம்'

வெளியேறும் அகதிகள் கூற்று!

கல்கத்தா, மார்ச் 11—

சென்ற இரண்டு மாதங்களாக கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் பலர் வெளியேறி, மேற்கு வங்கத்தில் நுழைந்தவண்ணம் உள்ளனர். இரண்டு தினங்களுக்குமுன் ஒரே நாளில் மட்டும் மேற்கு வங்கம் வந்த அகதிகள் தொகை 840 எனக் கூறப்படுகிறது.

வெளியேறும் இந்த அகதியினரில் பெரும்பான்மையினர் 'நாம ஆத்காரர்' அதாவது தீண்டப்படாதோராவர் எனச் சொல்லப்படுகிறது.

'ஏன் கிழக்கு பாகிஸ்தானை விட்டு வந்துவிட்டீர்கள்?' என அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர்கள், 'மற்றவர்கள் இதுபோன்று வெளியேறியுள்ளனர்,' எனப் பதில் கொடுத்தனராம். மேற்கு வங்கத்தில் பாகிஸ்தான் அகதிகளுக்கு செய்து தரப்படுவதாக கூறப்படும் வாழ்க்கை வசதிகளே பாகிஸ்தான் அகதிகளின் கூடுதலான வெளியேற்றத்திற்குக் காரணம் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது.

சென்னை சட்டசபையில்....

★

'சர்வீஸ் விதி' நிர்ணயம்?

சென்னை போக்குவரத்து இலாகாவிலுள்ள பதவிகளுக்கெல்லாம் 'சர்விஸ்' விதிகளை ஏற்படுத்துவது பற்றிய விஷயங்கள் சர்க்கார் பரிசீலனையிலிருந்து வருவதாகவும், இவ்விதிகள் யாவும் தயாரிக்கப்பட்டவுடன், போக்கு வரத்து இலாகாவை நிரந்தரமாக்கிச் சரியாக்குவது பற்றி கவனிக்கப்படுமெனவும் அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

முதன் முதலில்,சாலைப் போக்குவரத்துக் கார்ப்பொரேஷனை நிறுவ உத்தேசிக்கப்பட்டதால்தான் அந்த இலாகா தற்காலிகமானதாக ஏற்படுத்தப்பட்டதென்றும், ஆனால் தற்போது சர்க்கார், அம்மாதிரி கார்ப்பொரேஷனை நிறுவுவது அவசியமற்றது என முடிவு செய்துள்ளதால்தான் 'சர்வீஸ்' விதிகளை நிர்ணயிக்கும் விஷயம் கவனிக்கப்படுகிறதெனவும் அவர் குறிப்பிட்டார்.

சாத்தியமில்லையாம்

மருத்துவமனைகளில், சுகாதாரப் பரிசோதனைப் பகுதிகளில் (கிளினிக்குகள்) விதிக்கப்படும் கட்டணம் குறைக்கப்படுவதென்பது சாத்தியப்படாத ஒன்று என அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறியிருக்கிறார்.

சட்டசபை உறுப்பினர்களுக்கு இலவச சுகாதாரப் பரிசோதனைக்கு வசதி செய்து தரவேண்டுமென்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது அமைச்சர், அக் கோரிக்கையை மேற்படி உறுப்பினரிடமிருந்து தாம் எதிர்பார்க்கவேயில்லை என்றார்.

'ஆறு பேருக்கு அதிகமாகக் குழந்தைகள் பெற்றெடுத்த தாய்மார்கட்கு இலவச சுகாதாரப் பரிசோதனைக்கு வசதி செய்து தரப்படுமா?' என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர், பலத்த சிரிப்பொலிக்கிடையே, "குடும்பக் கட்டுப்பாடு பற்றி 'தீவிர பிரச்சாரம்'' செய்யும்படி உறுப்பினருக்கு ஆலோசனை கூறுகிறேன் என்றார்.

இங்குமா ஊழல் மயம்?

சிறிய பஞ்சாயத்துக்களின் தேர்தலில், உறுப்பினர்கள் கைதூக்கி வாக்குச் செய்யும் முறையானது பற்பல ஊழல்களுக்கும் இடமளிப்பதாயிருக்கிறதென்றும், சர்க்கார் இம்முறையினை ரத்து செய்ய வேண்டுமென்றும் பல உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர்.

ஸ்தல ஸ்தாபன மந்திரியும், நிதி மந்திரியும், இது விஷயம் பற்றி பரிசிலிக்கப்படும் என்று கூறியிருக்கின்றனர்.

பெரிய பஞ்சாயத்துக்களில் ஓட்டுப் போடப்பட்டுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன என்றும், ஆனால் சிறிய பஞ்சாயத்துக்களில் கடைப்பிடிக்கப்படும் இம்முறையானது அவ்வளவு உசிதமானதாகத் தெரியவில்லை என்றும், ஆயினும் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய இடங்களில், அதிகச் செலவில் இம்மாதிரியான பெரும் ஏற்பாடுகள் செய்வதுதான் கவனிக்கப்பட வேண்டியதாயுள்ளதென்றும், இது விஷயம் பற்றி பரிசீலனை செய்து தக்க முறையினை வகுப்பதை சர்க்கார் இனி மேற்கொள்ளுமென்றும் குறிப்பிட்டார் நிதி அமைச்சர்.

சொல்லளவோ? செயலளவோ?

சர்க்கார் பராமரிப்பு, மானிய உதவியுடன் நடைபெறும் மாணவர் உணவு விடுதிகள் (ஹாஸ்டல்கள்) சாதிப்பெயர்களைக் கொண்டுள்ளவையாக இருக்குமானால் அவற்றை மாற்றிவிடும்படி அரிசன இலாகா டைரக்டர் தாக்கீது பிறப்பித்துள்ளார் என்று அமைச்சர் பரமேசுவரன்தெரிவித்திருக்கிறார்.

கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக, மத்திய சர்க்கார், உதவித் தொகைகளாக ரூ. 4,00,000; கடனாக ரூ. 2,75,000 வழங்கினர்.

அகதிகளுக்கு 65 ஆயிரம் வீடுகள்

டெல்லி வட்டாரம் மட்டிலும் கிடைத்துள்ள சலுகை!

புதுடில்லி, மார்ச் 10—

டில்லி நகரிலும் சுற்றுப்புறத்திலுமாகச் சேர்த்து அகதிகள் குடியிருப்புக்கென 1954 ஏப்ரல்—டிசம்பர் மாதங்களுக்கிடையில் மொத்தம் 36,944 வீடுகள் இந்தியப் பேரரசால் கட்டப்பட்டுள்ளன.

இத்தகவலை, மக்கள்சபையில் அகதிகள் மறு வாழ்வுத் துறை அமைச்சர் அறிவித்தார்.

அதுவுமன்றி, ஏறத்தாழ ரூ. 3 லட்சம் வாடகை பெற்று 25,284 வீடுகள் அகதிகள் குடியிருக்க விடப்பட்டிருப்பதாகவும் மேற்படி அமைச்சர் கூறியுள்ளார்.

வருவான வரியில் சென்னையின் பங்கு

சென்னை, மார்ச் 11—

வருமான வரி விதிப்பில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் தொகையில், சென்னையின பங்குக்கு 1953—54-ம் ஆண்டின் இரண்டாவது பகுதி ஆறுமாதங்களுக்கு ரூ 3,06,76,000 கிடைத்தது என்று மந்திரி சுப்பிரமணியம், சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நடப்பு ஆண்டிற்கு ரூ. 6 கோடி 67 லட்சம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

விற்பனைவரி வசூலிப்பு

சென்னை ஆலோசனை

சென்னை, மார்ச் 11—

விற்பனை வரி வசூலிப்பதில் அதிகத் தொல்லை தராமலிருப்பது பற்றி விசாரணைக்குழு செய்துள்ள சிபாரிசுகளைப் பற்றி ஆலோசிக்க சென்னை சர்க்கார், விற்பனை வரி அதிகாரிகள் மாநாடு ஒன்று நடத்தும் என்று ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

வியாபாரிகள் பெருவாரியான மக்களுக்குத் தெரிந்த மொழியிலேயே கணக்குவைக்க வேண்டுமென்று உத்தரவிட எண்ணியிருப்பதாயும் அவர் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

சில்லறை வியாபாரிகள் மொத்தமாக ஒரு தொகையைச் செலுத்திவிடலாமென்றும் அவர்களை விரிவான முறையில் கணக்கு வைத்துக் கொள்ளும்படி கேட்க வேண்டியதில்லை என்றும் குழு செய்துள்ள சிபாரிசு பற்றியும் மாநாட்டில் கவனிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டசபையில் தமிழின் நிலை

மந்திரி தரும் விளக்கம்

மந்திரிகள் இனி சட்டசபையில் ஆங்கிலத்திலேயே பேசுவார்கள் என்று, பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டதையொட்டி, சர்க்கார் கட்சித் தலைவர் அதற்கான விளக்கம் தரவேண்டுமென, எதிர்க்கட்சியினர் கேட்டனர்.

மந்திரிகள் தமிழிலேயே பேசுவது தங்களுக்குப் புரியவில்லையென்று கன்னட, மலையாள உறுப்பினர்கள் தன்னிடம் கூறியதாகவும், இதை, தாம் மந்திரிகளுக்குக் கூறியதாகவும் சபைத் தலைவர் கூறினார்.

நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசுகையில், சர்க்காரின் பழைய கொள்கையில் எவ்வித மாறுதலும் கிடையாதென்று குறிப்பிட்டார்.

மந்திரிக்குத் தமிழ் தெரிந்தால், தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்குக் கூடியவரை அவர் தமிழிலேயே பேசுவார் என்றும், மேலும் தமிழ் நாட்டைப் பற்றிய விசேட விவகாரங்களாயிருந்தாலும் தமிழிலேயே பேசுவார் என்றும் சொன்னார்.

ஆங்கிலத்தை விட தமிழிலேயே தக்கவாறு பதில் அளிக்கலாமென்று மந்திரி கருதினால், அவர் தமிழிலேயே பதில் அளிப்பார் என்றும் நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

விவசாய தொழிலாளர் பட்ட அவதி

"7—2—55 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பிரபல மிராசுதாரரான பூண்டி வி. அப்பாசாமி வாண்டையார், மேற்படி ஊர் மிராசுதாரரான பூண்டி கி. துளசிய்யா வாண்டையாரின் பண்ணையைச் சேர்ந்த சுயம்பிரகாசம், மற்றும் ஐந்து பேரை தனது பண்ணையாட்களைக் கொண்டு அடித்து இழுத்துவரச் செய்ததாகவும், பகிரங்கமாக சாரக் கம்பங்களில் கட்டிவைத்து, தனக்குச் சொந்தமான சுவரை இடித்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டி, ஆறு பேர்களையும் தடிக்கம்பினால் மிருகத்தனமாகத் தாக்கியதாகவும், இடித்ததாகச் சொல்லப்பட்ட சுவற்றின் பெறுமானத்திற்காக ரூ. 33—8—0 வசூல் செய்து கொண்டு, மாலை 3 மணிவரை தனது கட்டிடத்திலேயே அவர்களைக்காவலில்வைத்திருந்ததாகவும் 3 மணிக்கு மேல் தனது காரிலேயே கொண்டுபோய் அம்மாப்பேட்டை போலீஸ்நிலையத்திலொப்புவித்ததாகவும் சொல்லப்படுகிறது!

"வழக்கைப் பதிவு செய்து கொண்டு புலன் விசாரித்த போலீசார் 6—3—55 இரவு அப்பாசாமி வாண்டையாரின் பண்ணையைச் சேர்ந்தவர்களும், அடித்தவர்களில் சிலருமான வெங்கடாசல விஞ்சிராயர், கருப்பன் அம்பலக்காரன், பிச்சன் அம்பலக்காரன் ஆகிய மூன்று பேரையும் கைது செய்துள்ளனர்,'' என்று, திருச்சியிலிருந்து வந்துள்ள செய்தி கூறுகிறது.

வேலூரில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போது, அவனைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளி விடுவார்கள்; அதைப் போலவேதான் ஏகாதிபத்தியங்களும்!

"இன்று வடநாட்டு ஏகாதிபத்தியம், வடநாட்டைத் தொழில் வளமிக்க நாடாக்கி, அந்தத் தொழில் வளர்ச்சியினுல் உற்பத்தியாகும் ஏராளமான பொருள்களுக்கு தென்னுட்டை 'மார்க்கெட்' ஆக்கி தென்னுட்டு மக்களின் செல்வத்தைச் சுரண்டி, நாளாவட்டத்தில் அவர்களை ஒட்டாண்டியாக்கிவிடும்; அப்போது, 'இனியும் தென்னுடு, வடநாட்டுடன் ஒட்டிக்கொண்டிருப்பதினுல் பயனில்லை,' என்று தெரிந்ததும், தென்னுட்டிற்கு 'விடுதலை' வழங்க முன்வரலாம்.

"அதுவரையில்—நம் செல்வம் முழுவதும் சுரண்டப்படும் வரையில்—தாசிபோல, 'நாம் எல்லாம் பாரதபுத்திரர்களல்லவா? நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? எல்லோரும் இந்தியராயிற்றே?'—என்பர். நாம் ஒட்டாண்டிகளானபின், நீங்கள் ஏன் வடநாட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்கிறீர்கள்? நீங்கள் யார்? நாங்கள் யார்?' என்று பேசுவர்—தாசிபோல!

"எனவேதான், நாம் சற்று புத்திசாலித்தனமாக, நம்மிடம் கொஞ்சநஞ்சம் இருக்கும் செல்வமும் சுரண்டப்படுமுன் புத்திசாலித்தனமாக வடநாட்டு ஏகாதிபத்திய அணைப்பினின்றும் விலகிக் கொள்ளவேண்டும் என்று தி. மு. கழகம் கூறுகிறது; அப்போதுதான் இந்த நாட்டு விவசாய, தொழிலாள, பாட்டாளி வர்க்க மக்கள் நலம் பெற்று, நல்ல பல திட்டங்கள் தீட்டி, தொழில் வளர்த்து, செல்வம் பெருக்கி, சுதந்திரத்துடன் வாழ முடியும்,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வேலூர் தி. மு. கழகச் சார்பில் கோட்டைவெளி மைதானத்தில் 13—3—55 ஞாயிறு அன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

வேலூர் நகர தி. மு. கழகச் சார்பில் 13—3—55 மாலை 6-30 மணி அளவில் கோட்டை வெளி மைதானத்தில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் வி. எஸ். அரங்கநாதன் தலைமை தாங்கினர்.

தோழர் போளுர் கே. சுப்பிரமணியம் அவர்கள், சிறிது நேரம் பேசியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் குறுகியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், நடைபெற்றுவரும் சட்டசபைக் கூட்ட நிகழ்ச்சிகள் குறித்து விரிவாகப் பேசினர்.

இறுதியாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் சொற்பெருக்காற்றினர்.

தோழர் அ. கருத்தோவியன் நன்றி நவில, தலைவர் முடிவுரையுடன் 9-30 மணி அளவில் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வுற்றனர்.

★

தொடர்ந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது—வளர்கிறது என்று நாம் சொல்லுகிறேம்; நாம் வளர்ந்திருப்பதாகச்சொல்லும்போது, எதிர்க் கட்சியினருக்கு எரிச்சலாகக்கூட இருக்கலாம். அவர்கள் எரிச்சல்பட வேண்டும் என்பதற்காகவேகூட நாம் வளர்ந்து வருகிறேம்—வளர்ந்து வருகிறேம் என்று கூறிக் கொண்டே இருக்கலாம்.

"நாம் வளர்ந்திருக்கிறேமா, இல்லையா என்பதை, நாம் சொல்லித்தான் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதல்ல.

"தி. மு. கழகம் பிறப்பதற்கு இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பே 'திராவிடர் இயக்கத்தை அழித்தொழிப்பதே எங்கள் வேலை' என்று கூறிக்கொண்டு, இன்னுமொரு கழகம் தோன்றியது—கையிலே நாம் 1939-ம் ஆண்டு உயர்த்திப் பிடித்திருந்த தமிழ்க் கொடியைத் தூக்கிக் கொண்டு!

"1939-ம் ஆண்டு, தமிழகத்தில், இந்தி மொழி திணிக்கப்பட்ட நேரத்தில் அதை எதிர்த்துப் போரிட்டு முறியடிக்க நாம் வில்லும், கயலும், புலியும் பொறித்த தமிழ்க்கொடி ஏந்தினேம்; மக்களுக்கு உணர்ச்சி ஊட்டினேம்; அவர்களின் முன்னேரது பெருமையை நினைவூட்டினேம்.

"மக்களும், பழம்பெரும் தமிழ்க் காவியங்களை தடவிப் பார்த்து, பூரித்து பெருமையுணர்ந்து, இந்தியை ஒழிக்கத் திரண்டெழுந்தார்கள்; வெற்றியும் கண்டோம். பின்னர், மக்களிடையே ஏற்பட்ட அந்த விழிப்புணர்வை, எழுச்சியை, தேசிய விடுதலை எழுச்சியாக மாற்றுவதற்காக நாம் பாடுபட முற்பட்டோம். தமிழுக்கு வந்த ஆபத்தைத் தடுக்க நாம் போர்க்களம் புகுந்தபோது, உயர்த்திப் பிடித்தத் தமிழ்க் கொடியை போரிலே வெற்றி பெற்றதும், வேலை முடிந்ததும் இறக்கி வைத்துவிட்டு தேச விடுதலைப் பணியில் ஈடுபட்டுள்ளோம். நாம் இறக்கிவைத்த அந்த தமிழ்க் கொடியை ஏந்திக் கொண்டு தான், நம்மையே ஒழித்து விடப் போவதாகக் கூறிக் கொண்டு புறப்பட்டது ஒரு கழகம். இன்று நிலை என்ன? அவர்களது கிளைகள் மூடப்படுகின்றன; நமது கிளைகள் புதிது புதிதாகத் தோன்றிய வண்ணமுள்ளன;

"அவர்களது நடவடிக்கை மிகக் குறுகிவிட்டது—அவர்களது வீட்டு முற்றத்துடன் என்ற அளவில்.

"நமது நடவடிக்கைகள், ஆட்சி பீடத்திலமர்ந்திருந்த ஆச்சாரியாரைப் பதவியிலிருந்து ஓடச் செய்கிற அளவு—நாட்டில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துகிற அளவு வளர்ந்திருக்கின்றன.

"இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அந்தக் கழகத்தவரைக் கேலி செய்யவேண்டுமென்பதற்காக அல்ல; தேய்ந்துபோன ஒரு கழகத்தையும், வளர்ந்து கொண்டிருக்கும் தி. மு. கழகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, நமது கழகம் வளர்ச்சியடைந்திருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காகத்தான்.

"நாட்டில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துகிற அளவு வளர்ந்திருக்கிறேம் என்று கூறினேன்; ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டம் என்ற பெயரில், நாட்டில் செத்துக்கொண்டுவரும் வருணச்சிரம தர்மத்திற்கு புது இரத்தம் தந்து உயிர்ப்பிக்க முயன்றார்; அவரது திட்டத்தை நாட்டிலே பலர் எதிர்த்தார்கள்.

"எதிர்த்தார்கள் என்றால் கம்யூனிஸ்டு கட்சி, ம. சோ. கட்சி, இன்னும் ஏனைய கட்சியினரும் தங்கள் எதிர்ப்பை தீர்மானங்கள் நிறைவேற்றிய அளவுடன் காட்டிக் கொண்டனர். திராவிட முன்னேற்றக் கழகம் தான் திட்டத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்து அதனை ஒழித்தது; ஆச்சாரியாரை கோவில் தூணிலே கட்டியது.

"திட்டத்தை எதிர்க்க நாம் முற்பட்ட நேரத்தில், பலர் நினைத்தார்கள்—'இவர்கள் எங்கே? அந்தப் பெரிய மனிதர் எங்கே? அவரது பேராற்றல் எங்கே? மலையோடு மோதிக்கொள்கிறார்கள்,' —என்று கூறி, 'இவர்கள் அடிபட்டு வருவார்கள்; நாம் மருந்தும் தடவி, புத்தியும் கூறி அனுப்பலாம்,' என்று காத்துக்கிடந்தவர்களும் உண்டு; அவர்களெல்லோரும் மூக்கிலே விரலை வைத்து ஆச்சரியப்படும் வகையில் நாம் போராட்டம் நடத்தி, நாட்டிலே பெரியதோர் அரசியல் மாற்றத்தை உருவாக்கினேம்.

"நாம் எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தபோது, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்களெல்லாரும், திட்டம் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில், தங்களுக்கும் வெற்றியில் பங்கு உண்டு என்று கூறினர்.

"பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், எல்லோருக்கும் வெற்றியில் பங்கு தந்தார்கள்—தாராளமாக—பெருந்தன்மை உள்ளத்தோடு—நாகரீகப் பண்போடு!

"அப்படி பெரும் வெற்றிகளைப் பெற்ற நேரத்தில், பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள், 'நாம் பெருமையும் பூரிப்பும் கொண்டால் மட்டும் போதாது; பொறுமையும் புதுப் பொறுப்பேற்கும் உள்ளமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்,' என்று குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகம் வளர வளர, அதன் பொறுப்புகளும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன.

"அதன் லட்சியமான 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்பதை எப்படியெல்லாம் செயல்படுத்தி, மக்கள் நமக்குத் தந்திருக்கிற புதுப் பொறுப்புகளை செவ்வனே ஏற்று நடத்துவது என்பதற்கான வழிவகைகளைக் காண்பதில், தி. மு. கழகம் இப்போது தன் கருத்தைச் செலவிட்டு வருகிறது.

"ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டி இந்த நாட்டு மக்களை ஏமாற்ற முற்பட்ட காங்கிரஸ், இப்போது 'சோஷலிசம் மாதிரி' எனும் ஆவடித் தீர்மானத்தைக் காட்டி ஏமாற்றப் பார்க்கிறது. 'சோஷலிசம்' பற்றி உலகில் பலர் பேசுகிறார்கள்; பேசுபவர்கள் எல்லாம் மத்திய தர, தொழிலாள, விவசாயப் பாட்டாளி மக்களாய், அவர்களின் பிரதிநிதிகளாய் இருப்பர்: ஆனால், குன்னியூரார்களாலும், கோவை முதலாளிகளாலும், வடநாட்டு பணத் திமிங்கிலங்களாலும் நடத்தப்படுகிற காங்கிரஸ்—அதுபற்றிப் பேசுகிறது.

"இந்த நாட்டிலே சோஷலிசம் பற்றிப் பேசி வருகிற நம்மையும், பிறரையும் எதிர்த்து அடிக்க வேண்டிய காங்கிரஸ், ஒரு கையிலே சந்தனக் கிண்ணம் வைத்துக் கொண்டும், அடுத்த கையைப் பின்புறமாக ஒளித்து வைத்துக் கொண்டும் நம்மை நோக்கி வருகிறது; நாம், அவர்கள் கையிலே இருக்கிற சந்தனக் கிண்ணத்தைக் கவனிப்பதைக் காட்டிலும், அடுத்த கையிலே அவர்கள் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கும் பொருள் என்னவாயிருக்கும் என்பதை யூகத்துடன் தெரிந்து கொண்டு, சற்று எச்சரிக்கையாக, சற்று பின்புறமே விலகி இருக்க வேண்டும்.

"காங்கிரஸ் கட்சியின் 'சோஷலிசம் மாதிரி'த் தீர்மானம், தென்னுட்டு மக்களை எவ்வளவும் ஏமாற்றிவிட முடியாது என்பதையும் அவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

"இதுபற்றி கோவையை அடுத்த பேரூரில் சின்னுட்களுக்கு முன்னர் கூடிய தி. மு. கழகப் பொதுக் குழு தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றியுள்ளது.

"இன்னுமொரு முக்கியமான தீர்மானம் தொழிற்சங்கங்களிலே தி. மு. கழகம் ஈடுபடுவது என்பதாகும்.

"கம்யூனிஸ்டு நண்பர்கள் பல ஊர்களில் தொழிற் சங்கங்கள் நடத்தி வருகிறார்கள்; அந்தச் சங்கங்களிலே, நமது கழக உறுப்பினர்களும் இருக்கின்றனர்; கழக உறுப்பினராயிருக்கும் தொழிலாளர்களின் நலன்களை முதலாளிகள் சூறையாடும்போது, கழகத் தோழர்கள், தாங்கள் உறுப்பினர்களாயுள்ள கம்யூனிஸ்டு தொழிற் சங்கங்களில் சென்று தங்களின் குறைகளை முறையிட்டால், அந்த தொழிற் சங்க தலைவர்கள், 'ஏன், உங்கள் அண்ணுதுரையிடம் போய் கூறுவதுதானே? வெளியிலே மட்டும் அவர்கள் வேண்டும்; தொழிற்சாலைக்கு உள்ளே மட்டும் நாங்கள் வேண்டுமோ?' என்றெல்லாம் கேலியும், கிண்டலும் செய்து வருவதினுல் நமது கழகத் தொழிலாளர்களின் நலன்கள், முதலாளிகளால் மட்டுமின்றி, கம்யூனிஸ்டுகளாலும் பலி கொள்ளப்பட்டு வருவதின் எதிரொலிதான் நாமே தொழிற் சங்கங்களில் ஈடுபடுவது என்ற அந்தத் தீர்மானமாகும்.

"அந்தத் தீர்மானம், நாம் எதிர்பார்த்தபடியே, பழைய தொழிற் சங்கவாதிகளுக்குக் கலக்கத்தை தந்து நமக்கு வெற்றியைத் தந்திருக்கிறது; தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே கோவையில் நமது கழகத்தைச்சேர்ந்த தொழிலாளத் தோழர்கள், தாக்கப்பட்டிருக்கிறார்கள்; ஆனாலும் நாம் இத்தகு இடுக்கண்களுக்கிடையேயும் எத்தனை தொல்லைகளையும் அனுபவித்துக் கொண்டேனும், தொழிற் சங்க இயக்கத்தை நடத்தி வெற்றி காணத்தான் போகிறேம் என்பது மட்டும் உறுதி.

"அவர்கள் ஏற்கனவே நாட்டு மக்களின் நினைவிலிருந்து மறைந்து வருகிறார்கள்; ஆந்திராவில் தேர்தல் நடைபெற்றது; முடிவுகள் வெளியாக இருந்த இரண்டொரு தினங்கள் வரையில், '124 இடங்களா—126 இடங்களா என்பதில் தான் தகராறே தவிர, 124 இடங்கள் நிச்சயம் எங்களுக்குத் தான்' என்று கூறிவந்தனர் கம்யூனிஸ்டுகள்; ஆனால், கிடைத்தது 15 இடங்கள் மட்டுமே!

"அதேபோன்றுதான் தமிழ் நாட்டில் அவர்களது கோட்டை என்று அவர்கள் கூறும், தஞ்சையில் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில் படுதோல்வி கண்டனர் கம்யூனிஸ்டுகள்.

"1951, 52-ம் ஆண்டில் போலீசாரின் பாதுகாப்பின்றி வெளியே வர முடியாது என்ற நிலையிலிருந்த குன்னியூர் சாம்பசிவய்யர், இன்று எந்த மக்களுக்குப் பயந்துகொண்டு வெளியில் வராதிருந்தாரோ, அதே மக்களின் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெறுகிறார்—கம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்து விட்டு!

"இந்தத் தோல்விகளுக்குக் காரணம் என்ன என்று கேட்டால், 'தப்புக் கணக்குப் போட்டு விட்டோம்,' என்கின்றனர், கம்யூனிஸ்டுகள்! அதுதான் நமக்குத் தெரிகிறதே! கணக்கை ஏன் தப்பாகப் போட்டாய்? எப்படிப் போட்டாய்?—என்பதுதானே கேள்வி!

"கம்யூனிஸ்டு நண்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்—'சென்ற தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த வாக்குகள் இந்தத் தேர்தலில் கிடைக்காமற்போனது என்?'—' என்று!

"காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றது — தஞ்சையிலோ அல்லது ஆந்திராவிலோ கம்யூனிஸ்டுகள் தோற்றது — எங்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடியதல்ல; மாருக வருத்தம் தரக்கூடியதேயாகும்.

"கம்யூனிஸ்டுகள்—அவர்களே கூறுகிறபடி- அவர்கள் போடும் தப்புக் கணக்குகளினுல் நாட்டு மக்களின் நலன்கள் பலியிடப் படுகின்றனவே? "யார் இந்த நாட்டு மக்களின் பகைவர்களோ, அந்த மிகப் பிற்போக்காளர்களான காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெறுவதற்கு—ஆட்சி பீடத்தில் அவர்கள் அமருவதற்கு, கம்யூனிஸ்டுகளின் தப்புக் கணக்குகள் காரணமாயிருக்கின்றனவே?

(தோழர் சம்பத் அவர்களின் விளக்கம் முடியவில்லை. தொடர்ச்சி நாளை வெளிவரும்)

கழகக் கூட்டம்

★

சேரன்மாதேவி
இரயில் நிலையம் சமீபம்
16—3—55 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சு. சந்தசாமி

பட்டம் தாணு பேசிய கூட்டத்தில் குழப்பம்

திருச்சூர், மார்ச் 13—

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் முன்னுள் முதலமைச்சர் பட்டம் தாணு பிள்ளை பேசுகையில், கூட்டத்தில் கலவரம் மூண்டு, அதனை அடக்க போலீசார் வரவேண்டிய நிலைமை ஏற்பட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

கலவரத்தின் விளைவாக, பி.-சோ. கட்சியைச் சேர்ந்த ஒருவர் பலமான கத்திக் குத்துக்கு ஆளாகியுள்ளாராம்.

கூட்டத்தின் ஆரம்பம் தொடங்கி முடிவு வரையிலும், கூட்டத்திலிருந்தவர்கள், பி சோ.-கட்சிக்கு எதிரான கோஷங்களை முழங்கிக்கொண்டே இருந்தனராம்.

கல்வி நிறுவனங்களில் மத போதனை

ஆந்திர சர்க்காரின் புது உத்திரவு

கர்னூல், மார்ச் 11—

ஆந்திர மாநில சர்க்கார், பள்ளிக் கூடங்களில் மதபோதனை செய்வது பற்றிய விதிகளை திருத்தியமைத்துள்ளது. அதன்படி, சர்க்கார முழுவதுமாக ஏற்று நடத்தும் எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் மதபோதனை நடத்த அனுமதிக்கப் படமாட்டாது.

இந்த விதி, சர்க்காரினுல் நிர்வகிக்கப்பட்டு, 'எண்டோமென்டுகள்' 'டிரஸ்ட் போர்டு'களால் நிறுவப்பட்ட பள்ளிகளைப் பாதிக்காது என்றும் தெரிகிறது.

தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளில் மதபோதனை நடத்த அனுமதித்திருந்த போதிலும், சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், மதபோதனை பெறுமாறு கட்டாயப்படுத்தப்படக் கூடாது என்றும், 15-வயதுக்குட்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பெற்றேர், அல்லது போஷகரின் சம்மதம் எழுத்து மூலமாகப் பெறப்பட வேண்டும் என்றும் அவ்வுத்தரவு கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.